**விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2022**

-----------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்கதேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5. சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் மற்றும் குறித்த அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது நிறுவகத்தின் மேலதிக நிதி ரூபா 5,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | நிதி அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்று நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வது நடைமுறையில் கடினமாகையால் நிறுவக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் முதலீடு செய்ததாக. | நிதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 11 திகதிய இலக்கம் 02/2014 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆராய்ச்சி முகாமைத்துவ குழுவின் அங்கீகாரமின்றி மற்றும் இடைக்கால அல்லது இறுதி ஆராய்ச்சி அறிக்கையை பெற்றக் கொள்ளாது 2015 சனவரி 01 திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையான காலத்தினுள் 08 அலுவலர்களுக்கு | ஆராய்ச்சி முன்மொழிவுகளிற்கு உரிய கொடுப்பனவு பரிந்துரை கடிதம் மாத்திரம் நிறுவகத்திடம் உள்ளதாக. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 8,819,379 ஆன ஆராய்ச்சி படிகள் செலுத்தப்பட்டு இருந்தன. | | |
| (இ) | 2016 மார்ச் 01 திகதிய இலக்கம் 04/2016 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | | | |
| | (i) 4.5 பந்தி | சுய நிதியீட்டல் செயற்பாடுகளிற்கு உரியதாக நடாத்தப்படும் பாடநெறிகளின் முடிவில் அதற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதும், 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான கால வீச்சளவில் செயற்படுத்திய 35 பாடநெறிகளிலிருந்து ஈட்டிய ரூபா 318,338,875 ஆன வருமானத்திற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | பாடநெறிகளை நடாத்தும் உச்ச மற்றும குறைந்த பட்ச கால எல்லைகள் மாற்றமடைவதன் மீது நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது நடைமுறையில் கடினமான செயலாகுமென. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) 5.2.1 பந்தி | சுய நிதியீட்டல் செயற்பாட்டு நடவடிக்கைகளில் மொத்த நேரில் கிரயத்தின் 15 சதவீதம் முதல் 30 சதவீத அளவொன்றை நிறுவகத்தின் மேந்தலைகளிற்காக ஒதுக்க வேண்டிய போதும், 2018 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட 16 பாதீடுகளில் உள்ளடங்கிய ரூபா 125,294,096 ஆன பாதீட்டு வருமானத்திலிருந்து அபிவிருத்தி செலவின | எங்களால் ஒவ்வொறு கற்கை சபைக்குமாக மேற்கொள்ளும் சிறிய செலவுகளை நிறுவகத்தினாளே மேற்கொள்வதால் மீண்டும் 5.2.1 பந்தி பிரகாரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை என. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

விடயத்திற்காக உரிய ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 93,665,087 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 55,990,259 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 37,674,828 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வளர்ச்சிக்கு ஈட்டிய வருமானம் அதிகரிந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு கணனி தொகுதியொன்றை அமைப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2017 ஆண்டில் ரூபா 2,100,000 தொகைக்கு உடன்பட்டு அவ்வாண்டிளேயே முற்பணமாக ரூபா 1,050,000 செலுத்தியிருந்த போதும், உடன்படிக்கை காலம் முடிவடைந்து 05 ஆண்டுகளிற்கு அதிக காலம் சென்றிந்த போதும், கணனித் தொகுதியை அமைத்திருக்கவில்லை. | 2023 ஆண்டு முடிவடைய முன்னர் கணனித் தொகுதி நடவடிக்கைகளை முடிவுறுத்த எதிர்பார்ப்பதாக. | கணனித் தொகுதி நடவடிக்கைகளை முடிவுறுத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்திற்கு தேவையான உபகரணங்கள் போதியளவு இருந்த போதும், விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் ரூபா 20,573,206 பெறுமதியான பொருட்பதிவேடு பண்டங்கள் கொள்வனவு செய்து பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | நிறுவகத்திற்கு சொந்தமாக விஞ்ஞானகூட வசதிகள் இல்லாததால் பட்டப்பின்படிப்பு மாணவர்களின் நடைமுறை பயிற்ச்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்ல பேராதனை பல்கலைக்கழக விவசாய விஞ்ஞான பீடத்தில் விஞ்ஞானகூட வசதிகளை பெற்றுக் கொள்ள நிறுவனத்திற்கு நேரிடுவதாக. | தேவைப்பாட்டை இனங்கண்டு நோக்கத்திலான செயப்பாடுகளிற்கு நிதியத்தை பயன்படுத்த வேண்டும். |
| (இ) | 2015 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் செயற்படுத்தப்பட்ட 39 பட்டப்பின்படிப்பு மற்றும் டிப்லோமா பாடநெறிகளுக்காக எந்தவொரு | பல ஊடகங்களின் மூலம் போதிய பிரசாரம் செய்திருந்த போதும் போருளாதார மற்றும் சமூகரீதியாக மிகவும் | அனைத்து பாடநெறிகளுக்கும் உச்ச கொள்ளலவுடன் கூடியவாறு |

| | | |
|---|---|---|
| மாணவரும் பதிவு செய்யதிருக்கவில்லை. | கடினமான காலப்பகுதி ஒன்றானதால் மாணவர்களை ஆட்சேர்ப்பது குறைந்தள்ளதாக. | மாணவர்களை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 நிதிய குறைப் பயன்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சர்வதேச ஆராய்ச்சி அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் (IDRC) மற்றும் பெருந்தோட்ட அமைச்சு மானியத்தின் கிழ் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 1,614,830 ஆன தொகையை 02 ஆண்டு முதல் 03 ஆண்டு காலமாக பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது இந்த ஆராய்ச்சிற்குரிய மாணவரகள் ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்து மற்றும் பூர்த்தி செய்து கொண்டும் இருப்பதால் 2023 ஆண்டில் அனைத்து செலவுகளையும் தீர்த்து ஆராய்ச்சி நடவடிக்கைகளை முடிவுறுத்தும் இயலுமையுளள்தாக. | நிதியம் உரிய பணிகளுக்காக உச்ச மற்றும் வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வெ்ண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| முறையான இடமாற்ற கொள்கையொன்றின் பிரகாரம் அலுவலர்களை இடமாற்றம் செய்யாத காரணத்தால் 22 அலுவலர்கள் 05 ஆண்டுகள் முதல் 34 ஆண்டுகள் வரையான காலமாக ஒரே இடத்தில் சேவையின் ஈடுபடுத்தப்படடிருந்தனர். | விவசாய பட்டப்பின் படிப்பு நிறவகம் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான இணைந்த நிறுவனமொன்றான போதும், நிறுவகத்தில் சேவை புரியும் ஆளனி இடமாற்றம் பலகலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு ஊடாக செய்வதற்கு நேர்ந்துள்ளமை நிலையான இடமாற்றக் கொள்கையொன்றை தயாரிக்கும் போது நிறுவகம் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினை ஒன்றாகவுள்ளதாக. | முறையான இடமாற்றக் கொள்கையொனறின் பிரகாரம் அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். |